# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி
# ஸ்ரீ ஜயேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகளின்
# இராமேசுவர யாத்திரை

1976, அக்டோபர் மீ 25வ திங்கட்கிழமையன்று பெரிய காஞ்சீ புரம் ஸ்ரீமடத்தில் சோமவார பூஜையை முடித்துக்கொண்டு ஆசார்ய ஸ்வாமிகள் ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவிலுக்குப் போய்த் தரிசனம் செய்து கொண்டு அங்கிருந்து இரவு 10 மணி சுமாருக்குத் தேனம்பாக்கத்தை அடைந்து ஸ்ரீ பெரியவர்களைத் தரிசனம் செய்துகொண்டு இரவு அங்கேயே தங்கிவிட்டார்கள்.

அடுத்த நாள் காலை 4 மணிக்கு தேனம்பாக்கத்தைவிட்டுப் புறப் பட்டு ஸ்ரீ மடம் முகாம் வாலாஜாபாத்தை அடைந்தது. அங்கு டாக்டர் வைத்யநாதய்யர் வீட்டில் பூஜை நடைபெற்றது. அன்று மாலை மாசிலா மணி முதலியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட ஹிந்து மத பள்ளிக்கூட மாணவர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் ஆசார்ய ஸ்வாமிகள் அருளுரை வழங்கினார்கள். பின்னர் மாலை 6-30 மணிக்கு அங்கிருந்து ஸ்ரீமடம் முகாம் புறப்பட்டு இரவு 10 மணிக்கு ஆத்தூர் போய்ச் சேர்ந்தது.

அதுசமயம் அந்த ஊர் மிராசுதார் ஸ்ரீனிவாஸய்யர் அவர்கள் ஆசார்ய ஸ்வாமிகளை எதிர்கொண்டழைத்து O. V அளகேசன் அவர்கள் டிரஸ்டால் நடத்தப்பட்டுவரும் பிருந்தாவனம் பப்ளிக் ஸ்கூலில் தங்கு வதற்கு ஏற்பாடு செய்தார்கள். அங்கே பெரியவர்கள் ஆசீர்வாதத்துடன் ஸ்ரீமடம் நிர்வாகத்தினால் கிருஷ்ண யஜுர் வேத பாடசாலை ஒன்று நிறுவப்பட்டு ஒரு ஆண்டுக் காலமாகச் செயல்பட்டு வருகிறது.

27வ பூஜை ஆத்தூர் பிருந்தாவனம் பப்ளிக் ஸ்கூலில் நடை பெற்றது. அன்று மாலை உயர்நிலைபள்ளி மாணவர்களுக்கும், பிருந்தாவன பள்ளி மாணவர்களுக்கும் ஆசார்ய ஸ்வாமிகள் அருளுரை வழங்கினார்கள்.

28, 29 இரண்டு நாட்கள் செங்கல்பட்டு மங்களாம்பிகா கல்யாண மண்டபத்தில் ஸ்ரீமடம் முகாம் தங்கியது. பூஜையும் அங்கேயே நடை பெற ஏற்பாடு செய்திருந்தனர். 28வ காலை வியாழக்கிழமை ஆசார்யர்கள் செங்கல்பட்டை நெருங்கும்பொழுது அவ்வூர் சீர்திருத்தப்பள்ளி மாணவர்கள் 700க்குமேல் எல்லையிலேயே வநதிருந்து ஸ்வாமிகளை அழைத்துப் போனது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. பஜனை யுடனும் மேளதாளத்துடனும் அழைத்துச் சென்றார்கள். அந்த இரண்டுநாள் முகாமில் ஆசார்ய ஸ்வாமிகள் பக்கத்திலுள்ள விநாயகர் கோவிலில் உபன்யாசம் செய்தார்கள். அன்று ஸ்கந்தஷஷ்டி தினம்.

30வ சனிக்கிழமை புக்கத்துரை என்னும் ஊரில் வரதர்கோவிலில் பூஜை நடந்தது. அந்த ஊர் பஞ்சாயத்து யூனியன் சந்திரசேகர ரெட்டியார் அவர்கள் ஆசார்ய ஸ்வாமிகளை வரவேற்றுப் பூஜைக்கு வேண் டிய ஏற்பாடுகள் செய்து தந்தார்.

31வ ஞாயிறன்று சீவாடியில் கோபால் ரெட்டியார் கிருஹத்தில் பூஜை நடந்தது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ரெட்டியார் அவர்கள் செய்து, ஆசார்ய ஸ்வாமிகளுக்கு மேளதாளத்துடன் வரவேற்புத் தந்தார் கள். அங்கு இலவச ஆஸ்பத்திரி ஒன்று ஏழைகளுக்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

நவம்பர் 1உ திங்களன்று சோமவார பூஜை. 2உ ஏகாதசி. 3உ பிருந்தாவன துவாதசி பூஜை. இவை மூன்றும் செய்யூர் சிவன் கோவிலில் அவ்வூர் ஜமீந்தார் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றன. அதுசமயம் ஆசார்ய ஸ்வாமிகள் அவ்வூர் ஹைஸ்கூலுக்கு விஜயம்செய்து ஸ்ரீ ராமஜயம் எழுதிய 700 மாணவர்களுக்கு டாலர் வழங்கி உபந்யாசமும் செய்தார்கள்.

4உ வியாழக்கிழமை ப்ரதோஷ பூஜை புலம்பாக்கத்தில் நடந்தது. அவ்வூர் நிலக்கிழார் திரு. முத்துலிங்க ரெட்டியார் அமோக வரவேற்புடன் ஆசார்யர்களை வரவேற்று அவர்கள் தங்கள் ஊருக்கு வந்துபோன ஞாபகார்த்தம் என்றும் இருக்கும் வகையில் ஸ்ரீ காமாக்ஷி அம்பாளுக்கு இருபுறமும் இரு ஆசார்யர்களுடனும், ஆதிசங்கரர் தங்கள் சிஷ்யர்களுடனும் பூஜை நடந்த கிருஹத்தில் இரவோடு இரவாகச் சுவரில் எழுதி எல்லோரும் பார்க்கும்வண்ணம் செய்தார்கள்.

ஆசார்ய ஸ்வாமிகள் செய்யூரிலிருந்து புலம்பாக்கம் வரும்வழியில், இரு குஷ்டரோக ஆஸ்பத்திரிகளுக்கு விஜயம்செய்து பிற்பகலில் அவர்கள் எல்லோருக்கும் சர்க்கரைப் பொங்கல் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். ஆசார்ய ஸ்வாமிகளைப் புலம்பாக்கத்தில் சென்னையிலிருந்து வந்த ஸ்ரீ டி. எம். பி. மஹாதேவன் அவர்களும் கிரீஸ் ராணியும் தரிசனம் செய்து கொண்டார்கள்.

5உ வெள்ளிக்கிழமை பூஜை கயப்பாக்கம் திரு. முத்துரங்க ரெட்டியார் வீட்டில் நடந்தது. அவர் புலம்பாக்கம் ரெட்டியாரின் சகோதரரே!

அடுத்து 6உ சனிக்கிழமை வபன பௌர்ணமி—அன்னாபிஷேகம். இவை சூணாம்பேடு ஜமீந்தார் ராமகிருஷ்ணன் சகோதரர்கள் ஆதரவில் நடைபெற்றன. அன்று தமிழ்நாடு உயர்மன்ற நீதிபதி பராசரர்—செங்கல்பட்டு கலெக்டர் மற்றும் பலர் சென்னையிலிருந்து வந்து ஆசார்யர்களைத் தரிசனம் செய்துகொண்டனர்.

7உ ஸ்ரீமடம் காம்ப் மரக்காணம் கவர்ன்மெண்ட் ஹைஸ்கூலில் ஏற்பாடு செயயப்பட்டிருந்தது. அன்று மூன்றுகால பூஜையையும் முடித்துக்கொண்டு மாலை 6–30 மணிக்குமேல் புறப்பட்டு ஆசார்யர்கள் இரவு கூனிமேடு என்ற ஊரில் இரவு தங்கி, 8உ உதயம் 6–30 மணியளவில் மயிலம் ஆதீனம் ஏற்பாடு செய்திருந்த பொம்மபாளையம் ஊரிலுள்ள ஜாகையை வந்தடைந்தார்கள். மயிலம் ஆதீனம் ஆசார்யர்களைப் பொன்னாடையுடனும் மாலை மரியாதைகளுடனும் தம் ஜாகைக்கு அழைத்துப் போனார். இருவரும் ஒருமணி பேசிக்கொண்டிருந்தனர். ஸ்ரீமடம் மரியாதையாக ஆதீனம் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. அன்றைய தினம் கிருத்திகா சோமவார பூஜை. மூன்றுகால பூஜையையும் முடித்துக்கொண்டு, ஆசார்ய ஸ்வாமிகள் மாலை அவ்விடம் விட்டுப் புறப்பட்டு பாண்டிச்சேரி எல்லையை எட்டுமணியளவில் வந்தடைந்தனர். அதுசமயம் பாண்டிச்சேரி கவர்ன்மெண்ட் அதிகாரிகளான கல்வித் தலைமைக் காரியதரிசி, ரெவின்யூ காரியதரிசி, இன்ஸ்பெக்டர் ஜெனரல், உயர்நீதிபதி மற்றும் பல உத்யோகஸ்தர்கள் கலந்துகொண்டு ஆசார்ய ஸ்வாமிகளை எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். ஆசார்ய ஸ்வாமிகள் தம் ஜாகைக்கு வரும்போது இரவு 10 மணி ஆகிவிட்டது. பூஜைக்கு ஈசுவரன் கோவிலில ஏறபாடு செய்யப்பட்டிருந்தது. 9-10-ஆம் தேதி இருதினங்கள் ஆசார்ய ஸ்வாமிகள் இந்த ஊரில் தங்கினார்கள்.